பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை.9.

கடித எண்.14363/பொது II/2022-2 நாள்.12.07.2022

அனுப்புநர்
திருமதி.கி.ஜெயலலிதா,பி.எஸ்.சி.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6 (இ)
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6(இ)
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6(இ)

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய சூலை 18ஆம் நாள் தமிழ்நாடு நாளாக கொண்டாடுதல் – 2வது கலந்தாலோசனைக் கூட்டம் (4.7.2022) - கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோருதல் -தொடர்பாக.

பார்வை:
1. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறையின் அரசு செயலாளர் அவர்களின் கடித எண். 8823/ விழா/ 2022 நாள்.17.06.2022.
2. அரசுக் கடித எண்.14363/பொது II/ 2022-1 நாள்.30.06.2022.
3. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறையின் அரசு செயலாளர் அவர்களின் கடித எண். 8823/ விழா/2022 நாள்.06.07.2022.

-----------

பார்வை 2ல் காணும் கடிதத்தின் தொடர்ச்சியாக, பார்வை 3ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட தமிழ்நாடு நாள் (சூலை 18) விழா கொண்டாடுதல் குறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் தலைமையில் நடைபெற்ற 2வது ஆலோசனைக் கூட்டத்தின்(4.7.2022) நடவடிக்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு உருவான வரலாறு தொடர்பான முக்கிய சுவரொட்டிகள் தயார் செய்து அனைத்து பள்ளிகளிலும் காட்சிப்படுத்துதல்,

சுவரொட்டிகள் தயார் செய்து கொடுக்கப்படும் எனவும், சுவரொட்டிகளை அச்சிடும் பணி பள்ளிக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்படும் என செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) சுவரொட்டிகள் தொடர்பான soft copy செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடமிருந்து தற்போது பெறப்பட்டுள்ளது. அதனை e-Mail மூலம் தங்களுக்கு அனுப்பப்படுகிறது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அவ்வாறு பெறப்பட்ட தமிழ்நாடு நாள் (சூலை 18) கொண்டாடுவதற்கான soft copy-களை சுவரொட்டிகளாக தயார் செய்து பள்ளிகளுக்கு விநியோகம் செய்து காட்சிப்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை அரசிற்கு அனுப்புமாறும் தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு துணைச்செயலாளருக்காக

ந.க.எண்: 036810/M/S2/2022, நாள்: 14.07.2022.

தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறித்த விரிவான அறிக்கையை தொகுத்து மின்னஞ்சல் வழியாக இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

மின்னஞ்சல்:- msectndse@gmail.com.

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழியாக)


தாய்நாடு தமிழ்நாடாக மாறிய நாள்
ஜூலை 18-ஆம் நாள்
தமிழ்நாடு நாள்
"நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கு
பொறுப்பு இளைய தலைமுறையினருக்கு உ
சமுதாயப்பணிகளிலும் தொண்டுகளிலும்
இளைஞர்கள் காட்டும் அக்கறையும்
மேற்கொள்ளும் பொறுப்புகளும் நாட்டின்
வாழ்வை மலரச் செய்யும். "
• பேரறிஞர் அண்ணா
news tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்பு

# தாய்நாடு
# தமிழ்நாடாக
## மாறிய நாள்
## லை 18ஆம் நாள்
## தமிழ்நாடு நாள்



"அறிவு வளர, ஆர்வம்
றக்க, மகிழ்ச்சி தோன்ற
க்களை நன்னெறியில்
கவைக்க என்று உள்ள
செயல்களுக்கல்லவா
நமது எழுத்துப்
பயன்படவேண்டும்."

–பேரறிஞர் அண்ணா